**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 278/2020**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 21.04.2025.**

| | |
|---|---|
| **Name : அருண்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கரிக்காப்பட்டியில் குடியிருந்து ஒப்பந்த வேலை செய்கிறேன். அ.சா.1 ராஜீயை எனக்கு தெரியும். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக காலை நேரத்தில் மனோகர் என்னை அழைத்து அ.சா.1 ஐ யாரோ அடித்ததாக சொன்னார். சம்பவத்தை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 17.12.2019 ம் தேதி மாலை 03.30 மணிக்கு நான் ஜேஜே நகருக்கு சென்ற போது அ.சா.1 ஐ எதிரிகள் நிலத்தில் தங்களுக்கு உரிமை உள்ளது என்று சொல்லி தகராறு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சின்ன பையன் என்பவர் அசா.1 நிலத்தில் மண் கொட்டினார்எ ன்றால் எனக்கு தெரியாது. பிறகு இது பற்றி கேட்டபோது கெட்ட வார்த்தையால் திட்டினாரா என்றால்எ னக்கு

தெரியாது. ரவி என்பவர் கம்பியை எடுத்து அ.சா.1 ன் வலது நெற்றியில் அடித்தார் என்றால் எனக்கு தெரியாது. சின்னபிள்ளை என்பவர் அ.சா.1 ன் முதுகில் அடித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாகலட்சுமி என்பவர் அ.சா.1 ன் கண்ணத்தில் அடித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 278/2020**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 21.04.2025.**

| | |
|---|---|
| **Name : சிவா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் கரிக்காப்பட்டியில் குடியிருந்து தறி ஓட்டும் வேலை செய்கிறேன். அ.சா.1 ராஜீயை எனக்கு தெரியும். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக காலை நேரத்தில் அ.சா.1 ஐ யாரோ அடித்ததாக சொன்னார். சம்பவத்தை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

2) கடந்த 18.12.2019 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு நான் மற்றும் மனோகர் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில்

சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான ஜலகண்டாபுரம் டூ மேச்சேரி சாலையில் ராஜீ என்பவருடைய நிலத்தின் அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.